DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.80/2024**

Deposition of witness for Prosecution அ.சா.6

| | | |
|---|---|---|
| பெயர் | : | சண்முகம் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | காளிமுத்து |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 10.03.2026

எதிரிகள் ஆஜர்

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது இரகுசேரியில் வசித்து வருகிறேன். அ.சா.1 மற்றும் எதிரிகளை தெரியும். கடந்த 24.08.2024 ம் தேதி காலை 8 மணியளவில் ஆண்டவர் செட் அருகில் 1ம் எதிரி சந்திரன் மணிகண்டன் கையைப் பிடித்துக்கொண்டார். 2ம் எதிரி பிரபு அ.சா.1ன் கண்ணத்தில் அடித்ததில் அவரின் காதில் ரத்தம் வந்தது. நான் கார்த்திக், முருகன், வன்மீகநாதன் ஆகியோர்கள் விலக்கிவிட்டோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் கொத்தனாராக கூலி வேலை செய்கிறேன். நானும் அசா.2 வன்மீகநாதனும் உறவினர்களா என்றால் ஆமாம் அவர் எனக்கு சித்தப்பா மகன். நான், அ.சா.1,அ.சா.2

ஆகியோர்கள் உறவினர்கள். எங்கள் ஊரில் உள்ள கல்யாணி முத்தையா கோவில் சம்பந்தமாக எதிரிகளும் அ.சா.2ம் பேசிக்கொள்ளமாட்டார்கள் என்றால் சரிதான். அ.சா.1க்கு எங்கள் ஊர் இல்லை என்றால் சரிதான். நான் தற்போது நீதிமன்றத்திற்கு அ.சா.1 மணிகண்டனுடன்தான் வந்துள்ளேன் என்றால் சரிதான். தேவகோட்டையில் பொதுவாக கொத்தனார் வேலை பார்ப்பவர்கள் காலை 8 மணிக்கு முன்பாகவே வேலை பார்க்கும் இடத்திற்கு சென்றுவிடுவோம் என்றால் சரிதான். பெரும்பாலும் ஞாயிற்றுக்கிழமை தவிர மற்ற நாட்களில் வேலை பார்ப்பேன் என்றால், சரிதான் உடல்நிலை அவ்வப்போது சரியில்லமால் இருக்கும்போது விடுமுறை எடுத்துவிடுவேன். கொத்தனார் வேலை செய்யும் ஆட்கள் அனைவரும் ஆர்ச் பூங்கா அருகேதான் கூடி வேலைக்கு செல்வார்கள் என்றால் இல்லை, நான் தனியாக சென்று வருகிறேன். நான் முதல் விசாரணையில் சொன்னதைதான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன். நான் எந்த வாகனத்தில் சென்றேன், அந்த வண்டி எண் போன்ற விபரங்களை போலீசார் விசாரணையில் தெரிந்து கொண்டார்களா என்றால் ஆமாம். என் கூட வந்தவர்களின் வண்டி எண்கள் மற்றும் வண்டி விபரங்களை போலீசார் விசாரணையில் தெரிந்து கொண்டார்களா என்றால் ஆமாம். ஆண்டவர் செட்டுக்கும் தேவகோட்டை நகர் காவல் நிலையத்திற்கும் இரு சக்கர வாகனத்தில் சென்றால் 2 நிமிடம் கூட ஆகாது என்றால் சரிதான். ஆண்டவர் செட்டிலிருந்து தேவகோட்டை அரசு மருத்துவமனைக்கு இரு சக்கர வாகனத்தில் சென்றால் 2 நிமிடம் கூட ஆகாது என்றால் சரிதான். அ.சா.1ஐ நான் காவல் நிலையத்திற்கோ, மருத்துவமனைக்கோ அழைத்துச் செல்லவில்லை என்றால் சரிதான். நான் சம்பவத்தை பார்க்காததால்தான் அ.சா.1ஐ நான் மருத்துவமனைக்கு

அழைத்துச் செல்லவில்லை என்று சொன்னால் சரிதான். நான் சொன்னதுபோல் எந்த சம்பமும் நடக்கவில்லை என்றும் அ.சா.1,அ.சா.2 எனக்கு உறவினர்கள் என்பதால் எதிரிகளை பழிவாங்கும் நோக்கத்தோடு அ.சா.1 ற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை: இல்லை</u>**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.